சார்பு நீதிமன்றம், பெருந்துறை
**OS** 114/2020

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் **Dw**1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 24.07.2026

**Dw**1 (மல்லிகா)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( வாதி தரப்பில்)**

நாராயண கவுண்டருக்கு அவரது சகோதரருடன் கிரயம் மற்றும் பாகப்பிரிவினையில் கிடைக்கப் பெற்ற சொத்துக்கள் நீங்கலாக வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. எந்த வகையில் வேறு சொத்துக்கள் பாத்தியம் என்றால் அவருக்கு கிரய வகையில் பாத்தியம். யாரிடம் எந்த தேதியில் கிரயம் பெற்றார்கள் என்றால அது எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரய பத்திரத்தின் நகல் என்னிடம் உள்ளது. மேற்படி கிரய பத்திரத்தின் அடிப்படையில் நாராயண கவுண்டருக்கு வேறு சொத்துக்கள் பாத்தியம் என நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரய பத்திரத்தின் நகலை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதை நான் இந்த வழக்கில் முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்று சொல்லமுடியுமா என்றால எனக்கு ஞாபகமில்லை. அது திருவாச்சி கிராமத்தில் புள்ளியங்காட்டில் வெங்கடாசலம் பூமிக்கு அருகில் உள்ளது. இந்த விவரத்தை நான் முதல் விசாரணையிலோ எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால சரியல்ல. எதிர்வழக்குரைக்கான சங்கதிகளை வழக்கறிஞருக்கு என் கணவர் தான் சொன்னார் என்றால நான் தான் சொன்னேன். மேற்படி பாகப்பிரிவினை மற்றும் கிரய ஆவணங்கள் நீங்கலாக நாராயண கவுண்டருக்கு வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வேறு சொத்துக்கள் பாததியப்பட்டிருநதால் அது குறித்து நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுருப்பேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 07.08.1968 பாக சாசன படி நாராயண கவுண்டருக்கு பழைய கச 55,22 ஏ,18 டி மற்றும் 21 ன் படி ஏக்கர் 7.06 பாத்தியம் என்றால் சரியல்ல. அந்த

பூமி விஸ்தீரணத்தை தான் வாதிகள் தாவாவில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் ஞாபகமில்லை. பிசாஆ 6 அடமான பத்திரத்தில் 1ம் வாதியோ, 1,2 பிரதிவாதிகளின் தாயாரோ தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். பிசாஆ 6 ல் எந்த சொத்துக்களை அடமானம் வைத்தேன் என்றால் ஞாபகமில்லை. பிசாஆ 7 ல் 1ம் வாதியோ, 1,2 பிரதிவாதிகளின் தாயாரோ தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். பிசாஆ 6 மற்றும் 7 ஆவணங்கள் எங்களுக்குள் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அவை 1ம் வாதியோ, 1,2 பிரதிவாதிகளையோ கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிசாஆ 4ல் வாதிகள் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு என் தகப்பனார் முழு உரிமையாளர் என தீர்ப்புஏற்படவில்லை என்றால் சரிதான். பிசாஆ 4 வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் 3ம் பிரதிவாதிக்காகவும் சேர்ந்து இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரி. 4ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால சரியல்ல. அவருக்காக நான் வழக்கு நடத்தவில்லை என்றால் சரி. தாவா சொத்தில் இரு கிணறுகள் உள்ளன. அதில் ஒரு கிணற்றில் மோட்டாா உள்ளது என்றும் மற்றொரு கிணற்றில் மோட்டார் இல்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் தாவா சொத்தில் உள்ள 2 கிணறு மற்றும் 2 மின் மோட்டார் ஆகியவற்றை வாதி குறிப்பிட்டுள்ளார் என்றால சரியல்ல. நான் வழக்குரையை சரியாக படிக்காமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.03.1938 ம் தேதிய கிரயம் பெற்ற சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அந்த இறுதி நிலை தீர்ப்பாணையில் பிறப்பிக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. அதனால் அந்த பத்திரத்தில் கண்ட கூட்டு பங்குதாரர்களையோ கூட்டாக கிரயம் பெற்றவர்களையோ இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நாராயண சாமி கவுண்டரும் என் தகப்பனார் முத்துசாமி கவுண்டரும் அனுபவத்து வந்தனர் என்றால் சரியல்ல. ஒரே நான்கு எல்லைக்குள் அனுபவித்து வரவில்லை. அது இரு பாகமாக உள்ளது. அதை என் தகப்பனாரும என் தாத்தாவும் கூட்டாக தான் அனுபவித்து வந்தனர். அந்த இரு பாகமும செக்குபந்திக்குள் தான் உள்ளது என்றால அது பற்றி எனக்கு தெரியாது. நான் 1969 ல் பிறந்தேன். 1976 ம் ஆண்டு

என் தாத்தா வயோதிகத்தின் காரணமாக அவரது மகள்களுக்கு தெரிந்தே என் தகப்பனாருக்கு சொத்தை ஒப்படைத்து விட்டார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அது எந்த தேதி, மாதம் என என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. யாருடைய முன்னிலையில் ஒப்படைத்தார்கள் என்றால என் அத்தை, அம்மா, அப்பா ஆகியோர் முன்னிலையில் ஒப்படைத்தார். இந்த விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1976 ம் ஆண்டு நாராயண கவுண்டர் வயோதிகம் காரணமாக அவரின் மகனான முத்துசாமி கவுண்டருக்கு விட்டுக் கொடுத்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால சரியல்ல. நாராயண கவுண்டர் இறக்கும் வரை அவர் தான் சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. என் தப்பனாரிடம் நில் ஒப்படைத்தது சம்பந்தமாக ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆவணங்கள் இருக்கலாம். அந்த ஆவணங்கள் என்னிடம் உள்ளது. அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆவணங்கள் இருப்பதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறான ஆவணங்களை எதுவும் நாராயண கவுண்டர் முத்துசாமி கவுண்டருக்கு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாராயணகவுண்டருக்கு முத்துசாமி, பாப்பாயம்மாள் மற்றும்சின்னம்மாள் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் நீங்கலாக வேறு வாரிசுகள் இல்லை. மேற்படி நாராயணகவுண்டரின் 3 வாரிசுகள் இறந்து விட்டனர். மேற்படி 3 நபர்களின் வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் சின்னம்மாள் , பாப்பாயம்மாளுக்கு சட்டப்படி பங்கு உள்ளது என்றால சரியல்ல. வாதிகள் இருவருக்கும் சேர்த்து தாவா சொத்தில் 6/18 பங்கும் 1 ம் பிரதிவாதிக்கும் 2 ம் பிரதிவாதிகும் தலா 3/18 பங்கும் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தலா 2/18 பங்கும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொதுதுக்களை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பாகம் பிரித்துக கொள்ளாமல் கூட்டாக தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. விற்ற சொத்துக்கள் நீங்காக மற்ற சொத்துக்களை தான் வழக்கு சொத்துகளாக வாதிகள் காண்பித்துள்ளதால் விற்ற சொத்துக்களை கிரயம் பெற்ற நபர்கள் மற்றும் விற்ற சொத்துக்களை வழக்கிற்று அவசியமானவர்கள் அல்ல என்றால் சரியல்ல. ரீச எண் 426/8, 10 மற்றும் 451/4 காலையில் கண்டுள்ள சொத்துக்களை தாவா சொத்துக்களாக

காண்பிக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாராயண கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வருவதால் எப்போது வேண்டுமானாலும் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து கொள்ளலாம் என்றும் கால வரையறை இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்துக்களை பிரித்துக் கொள்ளலாம் என அணுகியபோது நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்பதால் தான் வாதிகள் வழகது தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. முத்துசாமி கவுண்டர் காலத்திற்கு பின்னிட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் மட்டும் அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முத்துசாமி கவுண்டர் சொத்துககளை பாத்தியபபடுத்தி எனக்கு ஆவணங்கள் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால எழுதி வைத்துள்ளாா. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முத்துசாமி கவுண்டர் ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும் அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நாராயண கவுண்டரின் வாரிசுகள் என்ற முறையில் வாதிகளுக்கும் 1,2 பிரதிவாதிகளுக்கும் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தாவா சொததில் பாகம் உள்ளது என்றும் அதை நாங்கள் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(1,2 பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.24 12:46:50 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS